
## திராவிடத்தால் வாழ்கிறோம்

895

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

## இது பெரியார் மண்

ர.பிரகாசு

18




பகுத்தறிவுக் கொள்கைகளை முழுமையாகக் கடைப்பிடிக்கும் ஊர்களைப் பற்றிய பதிவாக ஒரு தொடர்.

# வீரம் செறிந்த விடுதலைபுரம்!

எதிர்காலம் இப்படித்தான் இருக்க வேண்டுமென்று, ஊருக்கு உழைப்பவர்கள் வரலாற்றில் வாழ்கின்றனர். அந்த வரலாறு கடந்த கால நிகழ்வுகளின் தொகுப்பாக மட்டுமே இருப்பதில்லை. அந்த வரலாற்றின் வலியும், வலிமையும், அது பதித்த அழுத்தமான சுவடும் அடுத்தடுத்த தலைமுறையினருக்குப் பாடமாகிறது. அப்படி செதுக்கப்பட்ட ஒரு வரலாறுதான் விடுதலைபுரம். திருச்சி லால்குடியில் உள்ள சிற்றூர்.

விடுதலை அரசியல் பேசுவோருக்கு வீரம் தரும் அந்த ஊரின் வரலாறு குமுளூரில் இருந்து தொடங்குகிறது. குமுளூரில் 1934-ஆம் ஆண்டு பிறந்தவர் மூ.தங்கவேலன். பள்ளிப்பருவத்தில் ஆழ்ந்த பக்திமான். அருகே உள்ள இருங்களூர் பள்ளியில், எட்டாம் வகுப்பு படிக்கும்போது, அரியலூரில் பொதுக்கூட்டம் ஒன்றிற்காக பெரியார் வருவதை அறிந்துள்ளார். 'கடவுள் இல்லை' என்று சொல்லும் பெரியாரைக் கல்லால் அடித்துவிட வேண்டும் என்று கோபத்தோடு, சட்டைப் பையில் கற்களைப் பொறுக்கி வைத்துக்கொண்டு சென்றுள்ளார்.

கூட்டத்தில் பெரியார் பேசும்போது, "எனக்கு சரியென்றுபட்டதை நான் சொல்கிறேன். உங்கள் புத்திக்கு சரியென்றுபட்டால் மட்டும், நீங்கள் ஏற்றுக்கொள்ளுங்கள்" என்று கூறியது, தங்கவேலனின் மூளைக்குள் புகுந்துகொண்டது. பெரியாரின் முழு பேச்சையும் கேட்டுவிட்டு சென்றார். கூட்டத்திற்குச் செல்லும்போது நெற்றி நிறைய பூசியிருந்த திருநீற்றைத் திரும்ப வரும் வழியிலேயே அழித்துவிட்டு, கடவுள் மறுப்பாளராக மாறியிருக்கிறார்.

தங்கவேலனின் மனதிற்குள் பிறந்த கலகம், குமுளூரில் புரட்சிகரமாய் வெடிக்கத் தொடங்கியது. தேநீர்க் கடைகளில் இருந்து கரிக்கட்டையை அள்ளிச்சென்று, ஊர் முழுக்க சத்திரம், சாவடிகள் அனைத்திலும் 'கடவுள் இல்லை, சாதி இல்லை, பெரியார் வாழ்க' என எழுதிவிட்டு, கீழே தன் பெயரையும் எழுதிவைத்துள்ளார். யார் இந்த தங்கவேலன் என ஊரே பரபரப்பானது.



மூ.தங்கவேலன்

தங்கவேலனைக் கண்டுபிடித்து பஞ்சாயத்தைக் கூட்டி கட்டிவைத்து அடித்தனர். பெற்றோரையும் பஞ்சாயத்துக்கு அழைத்து, 100 முறை காலில் விழ வைத்து மன்னிப்பு கேட்கச் செய்தனர். நாலணா அபராதமும் வாங்கிக்கொண்டே, தங்கவேலனை விடுவித்துள்ளனர்.

இனி, அந்த ஊரில் வசிக்க முடியாது என்ற நிலை ஏற்பட்டு, அருகே உள்ள காணக்கிளியநல்லூருக்கு தங்கவேலன் குடும்பம் குடிபெயர்ந்தது. அந்த ஊரிலும் நிலவிய சாதி ஆதிக்க மனநிலையை அவரால் பொறுத்துக்கொள்ள இயலாமல், அவ்வப்போது எதிர்த்துக்கொண்டே இருந்துள்ளார். இடைப்பட்ட காலகட்டத்திலேயே திருமணமும் செய்துகொண்டார். தீவிர சுயமரியாதைக்காரராக இருந்த தங்கவேலன், இனி, இந்த ஊரிலும் இருக்க முடியாது என்று முடிவெடுத்தார்.

எந்த ஊருக்குச் சென்றாலும் அங்கு சாதி இருக்கத்தான் செய்யும், அது தனது சுயமரியாதையை, சீண்டிக்கொண்டேதான் இருக்கும் என்று யோசித்த தங்கவேலன், 1958-இல் அடர்ந்த காட்டுப்பகுதி ஒன்றைத் தனது வசிப்பிடமாக மாற்ற முடிவெடுத்துள்ளார். கல்லுக்குமிஞ்சான் காடு என்று அழைக்கப்பட்ட அந்தப் பகுதியில் இருந்து நாலாபுறமும் கண்ணுக்கு எட்டியவரை ஊரே கிடையாது. காணக்கிளியநல்லூர், கண்ணாகுடி, கொளக்குடி, பெருவளப்பூர் ஆகிய கிராமங்களை இணைக்கும் ஒற்றையடிப்பாதை அந்த அடர்ந்த காட்டின் வழியாகச் சென்றது. அந்த ஒற்றையடிப்பாதையின் இணைப்புப் பகுதியில், தனது அப்பாவின் பெயரில் 3 ஏக்கரும், தனது பெயரில் 2 ஏக்கரும் அரசிடம் போராடிப் பெற்றுள்ளார். அந்த அடர்ந்த காட்டை, சாதி பேதமில்லாமல் அனைத்து மக்களும் சமத்துவமாக வசிக்கும் 'விடுதலைபுரமாக' உருவாக்கினார். அந்த வரலாற்றை வரும் வாரம் வாசிப்போம்.

...பயணிப்போம்.

## பா.ஜ.க. தலைவராக மாறிவிட்ட பழனிசாமி!

அறநிலையத்துறை நிதியில் கல்லூரிகள் கட்டுவதை மாபாதக செயல்போல கூறியிருக்கிறார், எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி. அறநிலையத்துறை நிதி என்பது தனிநபரோ அல்லது அரசோ பயன்படுத்திக்கொள்வதற்காக அல்ல. அறநிலையத்துறை நிதியைக் கொண்டு என்னென்ன பணிகள் செய்யலாம் என்பதற்கு விதிகள் உள்ளன. அந்த விதிகளுக்கு உட்பட்டு கல்லூரிகளை அமைத்து, அதில் பல்லாயிரக்கணக்கான மாணவர்களைப் படிக்கச் செய்து, அறநிலையத்துறைக்கே பெருமை சேர்த்திருக்கிறது திராவிட மாடல் அரசு. இத்தகைய வரலாறுகள் ஏற்கனவே தமிழ்நாட்டில் உண்டு. ஆனால், அவற்றையெல்லாம் அறியாமல், பா.ஜ.க.-காரரைப் போல பேசியிருக்கிறார் எடப்பாடி பழனிசாமி.

பா.ஜ.க.காரரைப் போல் அல்ல, பா.ஜ.க. தலைவரைப் போல பேசியிருக்கிறார் என கடுமையாகச் சாடி பதிவிட்டிருக்கிறார் பத்திரிகையாளர் நெல்சன் சேவியர்.

**" 'அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்**
**ஆலயம் பதினாயிரம் நாட்டல்**
**பின்னருள்ள தருமங்கள் யாவும்**
**பெயர் விளங்கி ஒளிர நிறுத்தல்**
**அன்னயாவினும் புண்ணியம் கோடி**
**ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்'**

பாரதி என்ன சொல்றாருன்னா, ஆயிரக்கணக்கான கோயில்கள் கட்டுவதை விட, புண்ணிய செயல் ஏழை எளியோருக்கு கல்வி கொடுப்பது. ஆனால், அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி சொல்கிறார், அறநிலையத்துறை நிதியில் பள்ளி, கல்லூரிகள் கட்டுவது வேண்டாத செயலாம். அதை அ.தி.மு.க. எதிர்க்கிறதாம். ஆட்சிக்கு வந்தால் அந்தத் திட்டம் நிறுத்தப்படுமாம்.

தமிழ்நாடு மாதிரியான மாநிலத்தின் எதிர்காலத்தைக் கருத்தில்கொண்டு பேசவேண்டிய ஒரு முதலமைச்சர் வேட்பாளருக்கு, கல்வி பற்றி இப்படி ஒரு பார்வை இருப்பது உண்மையில் அதிர்ச்சியாக இருக்கிறது. பா.ஜ.க. தன் கட்சியிலிருந்தே ஒரு முதலமைச்சர் வேட்பாளரை நிறுத்தியிருந்தால் கூட, தமிழ்நாட்டில் இதைப் பேசுவதற்கு சற்று யோசிப்பார்கள். எடப்பாடி பழனிசாமி பா.ஜ.க.வின் அடிமையாகவே மாறிவிட்டார் என்று பலரும் குற்றம் சாட்டுகிறார்கள். இல்லை, அவர் அதன் தலைவராகவே மாறிவிட்டார்" என்று பதிவிட்டுள்ளார்.

## பொய்ப்பெட்டி

கோவி.லெனின்

68

``கழகம் சந்திக்கும் அவதூறுகள் குறித்த வினாவும் - விடையும்...''

# பரப்புரை எங்கும் பொய்யுரை !



**அ.தி.மு.க. ஆட்சியின் திட்டங்களை முடக்கியதாக எதிர்க்கட்சித் தலைவர் பழனிசாமி தனது பரப்புரைப் பயணத்தின் தொடக்கத்திலேயே குற்றம் சாட்டியிருக்கிறாரே?**

அமலாக்கத்துறை உள்ளிட்ட ஒன்றிய அரசின் விசாரணை வளையத்திலிருந்து, 'மகனைக் காப்போம். சொந்தங்களை மீட்போம்' என்று நேரடியாகச் சொல்ல முடியாததால், 'மக்களைக் காப்போம். தமிழகத்தை மீட்போம்' என்று பா.ஜ.க.வுடன் கூட்டணி சேர்ந்துகொண்டு பரப்புரைப் பயணத்தைத் தொடங்கியிருக்கிறார் எடப்பாடி பழனிசாமி. பா.ஜ.க.விடமிருந்துதான் மக்களைக் காத்து, தமிழகத்தை மீட்க வேண்டும் என்பது எல்லோருக்கும் தெரியும். யாரிடம் நாடு சிக்கி சீரழிகிறதோ அவர்களிடமே சரணடைந்து, பரப்புரைப் பயணம் மேற்கொள்வதெல்லாம் 'வேற லெவல்' என்று சமூக வலைதளங்களில் எடப்பாடி பழனிசாமியின் குற்றச்சாட்டுக்குப் பதிலடிகள் பதிவாகி வருகின்றன.

தி.மு.க. ஆட்சியில் தொடங்கப்பட்டு, ஜெயலலிதா தலைமையிலான ஆட்சியிலும் தொடர்ந்த 'ஏழைப் பெண்களுக்கானத் திருமண உதவித் திட்டம்', 'ஜெயலலிதா ஆட்சியில் தொடங்கப்பட்ட மாணவர்களுக்கான லேப்-டாப் வழங்கும் திட்டம்' இவற்றை 2018-ஆம் ஆண்டு முதல் முடக்கியவர் அப்போதைய முதலமைச்சரான எடப்பாடி பழனிசாமிதான். மாறாக, 'அம்மா உணவகம்' உள்ளிட்ட அ.தி.மு.க. ஆட்சியின் திட்டங்களை இப்போதும் சிறப்பாகத் தொடர்ந்து வருகிறது திராவிட மாடல் அரசு. கழிவறைகளுக்கு பெயிண்ட் அடித்து 'அம்மா கிளினிக்' என்று பம்மாத்து காட்டியவர் எடப்பாடி பழனிசாமி. அதற்குப் பதில், 'மக்களைத் தேடி மருத்துவம்' என்ற மகத்தான திட்டத்தைக் கொண்டு வந்து, நகரங்களிலும் கிராமங்களிலும், மலைப்பகுதிகளிலும் உள்ள மக்களை மருத்துவக் குழு நேரடியாகச் சந்தித்து, தொற்றா நோய்களுக்கான முறையான சிகிச்சையை மாதந்தோறும் வழங்கி வருகிறது திராவிட மாடல் அரசு. 'மக்களைத் தேடி மருத்துவ'த்தின் பயனாளிகள் எண்ணிக்கை ஏறத்தாழ 3 கோடி பேர் என்ற நிலையை அடைந்துள்ளதையும், இத்திட்டத்தை ஐ.நா. அமைப்பு பாராட்டியதையும், சர்வதேச அளவிலான மருத்துவக் கருத்தரங்கில், இந்தியாவின் பிரதிநிதித்துவமாக தமிழ்நாடு அரசின் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்கள்தான் உரையாற்றினார் என்பதும்கூட எடப்பாடி பழனிசாமிக்குத் தெரிந்திருக்காது.

> தவழ்ந்து தவழ்ந்து எடப்பாடி பழனிசாமி தன்னைக் காத்துக் கொள்ளட்டும். தமிழ்நாட்டைக் காக்க திராவிட மாடல் முதலமைச்சர் இருக்கிறார்.

இதுபோலவே, தமிழ்நாட்டின் தொழில்துறை வளர்ச்சி பற்றியும், எதையும் அறியாமல் தொடர்ந்து அறிக்கை வெளியிடும் எடப்பாடி பழனிசாமிக்கு, 10 லட்சம் கோடி ரூபாய்க்கு மேலான முதலீடும், 30 லட்சம் அளவிலான வேலை வாய்ப்புகளும் உருவாக்கப்பட்டிருப்பதை புள்ளிவிவரங்களுடன் தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா நெற்றியடி பதிலாகத் தந்திருக்கிறார். எந்த பா.ஜ.க.வுடன் கூட்டணி சேர்ந்து எடப்பாடி பழனிசாமி பயணிக்கிறாரோ, அந்த பா.ஜ.க. தலைமையிலான ஒன்றிய அரசின் பொருளாதார ஆய்வறிக்கையில், நாட்டிலேயே 9.69% பொருளாதார வளர்ச்சியுடன் தமிழ்நாடு முதலிடத்தில் இருப்பது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. தவழ்ந்து தவழ்ந்து எடப்பாடி பழனிசாமி தன்னைக் காத்துக் கொள்ளட்டும். தமிழ்நாட்டைக் காக்க திராவிட மாடல் முதலமைச்சர் இருக்கிறார்.

...வினா தொடரும்.

## ஃப்ளாஷ்பேக்



டிஸ்கோ காஜா



### உற்சாகமான, மகிழ்ச்சியான தருணம்!

1984-ஆம் ஆண்டு கோவை மாவட்டத்திற்கு வருகை தந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு, மாநகர் மாவட்டச் செயலாளர் காரா.சுப்பையன் தலைமையில், கோவை ரயில் நிலையம் முன்பு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. அப்போது, நான் இளைஞர் அணி நிர்வாகியாக முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு சால்வை அணிவித்து வரவேற்பு அளித்தேன். தலைவருடன் கழக முன்னோடி அண்ணன் ஆற்காட்டார் அவர்களும் வருகை தந்தார். உற்சாகமான, மகிழ்ச்சியான அந்தத் தருணத்தை, இந்தப் புகைப்படத்தைப் பார்க்கும்போதெல்லாம் நினைத்துக் கொள்வேன்.

**– டிஸ்கோ காஜா, மாவட்டத் துணை அமைப்பாளர், சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு, கோவை தெற்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### மொட்டையடிக்கப்பட்ட ஏ.வி.பி.ஆசைத்தம்பி!

ஏ.வி.பி.ஆசைத்தம்பி எழுதிய 'காந்தியார் சாந்தியடைய' என்ற நூலுக்காக ஆறுமாதக் கடுங்காவல் தண்டனை அளிக்கப்பட்டு. திருச்சி சிறையில் அடைக்கப்பட்டார். அதற்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, ஆறுமாத கடுங்காவல் தண்டனை ஒரு மாதமாக குறைக்கப்பட்டட்டது. பின்னர் பிணையில் விடுதலை ஆனார். பிணையில் வெளிவருவதற்கு முதல் நாள் அவருக்கு மொட்டை அடித்தது சிறை நிர்வாகம்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131